Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.117/2022, Cr.No.940/2020, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | |
|---|---|
| பெயர் | தமிழரசன் |
| வயது | 35 |
| தந்தை/கணவர் பெயர் | இளவரசன் |
| தொழில் | உதவி மருத்துவர் |
| கிராமம் | திருப்பத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 21st day of May 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

விசாரணை தொடங்கப்பட்ட நேரம் – 11.37 AM

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 11.43 AM

**முதல் விசாரணை (எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.11.2020 அன்று இரவு 09.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நான் பணியிலிருந்தபோது, ராஜாத்தி என்பவரை சிகிச்சைக்காக சூர்யா என்பவர் அழைத்து வந்தபோது அவரை விசாரித்ததில், அவரை அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் புளியங்குளம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து 3 ஆண்கள் மற்றும் 2 பெண் நபர்கள் தன்னை உருட்டுக் கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது, அவருக்கு,

1. வலது முழங்கையில் சிறாய்ப்பு காயம் காணப்பட்டது.

மேற்படி அவரை உள்நோயாளியாக அனுமதித்து, அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கினேன். **அந்த விபத்துப் பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றைய தினமே இரவு 09.00 மணியளவில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நான் பணியிலிருந்தபோது, மணி என்பவரை சிகிச்சைக்காக அவருடைய மகன் திருப்பதி என்பவர் அழைத்து வந்தபோது அவரை விசாரித்ததில், அவரை அன்றைய தினம் இரவு 08.00 மணியளவில் புளியங்குளம் பேருந்து நிறுத்தம் அருகே வைத்து 3 ஆண்கள் மற்றும் 2 பெண் நபர்கள் தன்னை உருட்டுக் கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது, அவருக்கு,

1. வலது தோள் பட்டையில் கண்றிய காயமும்,
2. வலது முழங்கையில் கண்றிய காயமும் காணப்பட்டது.

மேற்படி அவரை உள்நோயாளியாக அனுமதித்து, அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கினேன். **அந்த விபத்துப் பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.3–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

இரவு நேரம் என்பதால் தவறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.